**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.12/2020**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராதா | மதம் | : இந்து |
| க/பெ | : வெங்கடேசன் | ஜாதி | : -- |
| வயது | : 42 | கிராமம் | : புஜ்ஜிரெட்டிபள்ளி |
| தொழில் | : நெசவு | வட்டம் | : திருத்தணி |

**16.09.2025**
**பி.வா.சா. 1 மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

1. நான் எங்கு வசிக்கிறேன் என்றால் புஜ்ஜிரெட்டிபள்ளியில் வசிக்கிறேன். எனது வீட்டு எண் தெரியுமா என்றால் கதவு எண் தெரியாது. யார் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் துளசி என்மீதும் என் கணவர் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் படிக்கவில்லை. கையொழுத்து மட்டும் போடத்தெரியும். நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரைக்கு யார் விவரம் சொன்னது என்றால் என் கணவர்தான் விவரம் சொன்னார். எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தை என் வழக்கறிஞர் நான் சொல்லி தயார் செய்தாரா அல்லது அவராக தயார் செய்து தாக்கல் செய்தாரா என்றால் நான் சொல்லி எழுதிகொடுத்ததை வைத்துதான் வழக்கறிஞர் தாக்கல் செய்தார். வழக்கு சொத்து என்ன என்றால் பாதி காலிமனையாகவும் பாதி வீடுகட்டியும் உள்ளது. அந்த காலிமனையில் வீடுஉள்ளதா என்றால் இல்லை. வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளது என்றால் காலிமனைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. புஜ்ஜிரெட்டிபள்ளி கிராமத்தில் தோப்பு தெருவில் தான் வீடு உள்ளது என்றால் ஆமாம். வழக்கு காலிமனைக்கு அருகில் எனக்கு வீடுஉள்ளதா என்றால் ஆமாம். காலிமனைக்கு தெற்குபக்கம் வீடு உள்ளது என்றால் ஆமாம். அந்த வீட்டின் கதவு எண்தான் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். எத்தனை வருடங்களாக நான் அந்த

வீட்டில் உள்ளேன் என்றால் 25 வருடங்களாக நான் உள்ளேன். துளசி வீடு எங்குள்ளது என்றால் பக்கத்து தெருவில் உள்ளது. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் என் கணவரின் பாட்டி உண்ணாமலையம்மாளுக்கு பாத்தியம். அந்த அம்மாவிற்கு சொத்து எப்படி வந்தது என்றால் அவரது தாயார் வழியில் வந்த சொத்தாகும் உண்ணாமலையம்மாளுக்கு அவரது தாயார் வழியில் பாத்தியம் என்று எப்படி சொல்கிறேன் என்றால் அவர் 1963 வருட பத்திரத்தில் சொல்லியுள்ளார்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)